தொகுப்பு (5)

**21.06.2012 அன்று தலைமைச் செயலகத்தில் மாண்புமிகு நிதியமைச்சர் தலைமையில் நடைபெற்ற மாநில அளவிலான உயர்நிலை விழிப்பு மற்றும் கண்காணிப்புக் குழுக் கூட்ட நடவடிக்கை குறிப்பு**

மாநில அளவிலான உயர்நிலை விழிப்பு மற்றும் கண்காணிப்புக் குழுக் கூட்டம் தலைமைச் செயலகத்தில் நாமக்கல் கவிஞர் மாளிகை 10–வது தளத்தில் மாண்புமிகு நிதியமைச்சர் தலைமையில் 21.06.2012 அன்று மாலை 4.00 மணிக்கு நடைபெற்றது. கூட்டத்தில் கலந்து கொண்ட உறுப்பினர்கள் மற்றும் அரசு அலுவலர்களின் விபரம்:–

| வ. எண். | திருவாளர்கள் | தலைவர்/ உறுப்பினர்கள் |
|---|---|---|
| 1. | மாண்புமிகு நிதியமைச்சர் | உறுப்பினர் |
| 2. | மாண்புமிகு அமைச்சர் (ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம்) | உறுப்பினர் |
| 3. | திரு. பி.வேணுகோபால், பாராளுமன்ற உறுப்பினர், திருவள்ளூர் தொகுதி | உறுப்பினர் |
| 4. | திரு. எம். ஆனந்தன், பாராளுமன்ற உறுப்பினர், விழுப்புரம் தொகுதி | உறுப்பினர் |
| 5. | திருமதி . த. இந்திராகாந்தி, சட்ட மன்ற உறுப்பினர், துறையூர் தொகுதி | உறுப்பினர் |
| 6. | திருமதி. எஸ். கனிதா சம்பத், சட்ட மன்ற உறுப்பினர், மதுராந்தகம் தொகுதி | உறுப்பினர் |
| 7. | திரு. இரா. மணிமாறன், சட்ட மன்ற உறுப்பினர், பூவிருந்தவல்லி தொகுதி | உறுப்பினர் |
| 8. | திரு. மு.வீ.கருப்பையா, சட்ட மன்ற உறுப்பினர், சோழவந்தான் தொகுதி | உறுப்பினர் |
| 9. | திரு. செ. காமராஜ், சட்ட மன்ற உறுப்பினர், கிருஷ்ணராயபுரம் தொகுதி | உறுப்பினர் |
| 10. | திரு. சு. ரவி, சட்ட மன்ற உறுப்பினர், அரக்கோணம் தொகுதி | உறுப்பினர் |
| 11. | திருமதி . மனோரஞ்சிதம், சட்ட மன்ற உறுப்பினர், ஊத்தங்கரை தொகுதி | உறுப்பினர் |
| 12. | திரு. இரா.பெருமாள், சட்டமன்ற உறுப்பினர், ஸ்ரீபெரும்புதூர் தொகுதி | உறுப்பினர் |

| | | |
|---|---|---|
| 13. | திரு. கே.பொன்னுசாமி, சட்டமன்ற உறுப்பினர், தாராபுரம் தொகுதி | உறுப்பினர் |
| 14. | திரு. இரா. தமிழ்ச்செல்வன், சட்டமன்ற உறுப்பினர், பெரம்பலூர் தொகுதி | உறுப்பினர் |
| 15. | திரு. சு.மாதேஸ்வரன், சட்டமன்ற உறுப்பினர், ஆத்தூர் தொகுதி | உறுப்பினர் |
| 16. | திரு. பொன் ராஜா, சட்டமன்ற உறுப்பினர், பொன்னேரி தொகுதி | உறுப்பினர் |
| 17. | திரு. ஐ.ஜானகிராமன், சட்டமன்ற உறுப்பினர், வானூர் தொகுதி | உறுப்பினர் |
| 18. | முதன்மைச் செயலாளர், உள் துறை, சென்னை–9 | உறுப்பினர் |
| 19. | காவல் துறை கூடுதல் இயக்குநர், சமூக நீதி மற்றும் மனித உரிமைகள், சென்னை–4. | உறுப்பினர் |
| 20. | இயக்குநர்/துணை இயக்குநர் ஆதிதிராவிடர் நல தேசிய ஆணையம், சென்னை–6 | உறுப்பினர் |
| 21. | செயலாளர், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை | அமைப்பாளர் |
| 22. | ஆணையர், ஆதி திராவிடர் நலம் | உறுப்பினர் |
| 23. | இயக்குநர், பழங்குடியினர் நலம் | சிறப்பு அழைப்பாளர் |

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறைச் செயலாளர் திரு ஆ.சு. ஜீவரத்தினம், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலனுக்காக பல்வேறு நலத்திட்டங்களை வகுத்துத் தந்துள்ள மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சார்பாக மாநில அளவிலான வன்கொடுமைத் தடுப்புக்குழு கூட்டத்தினை நடத்த வந்துள்ள மாண்புமிகு நிதியமைச்சர், மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர், உள்துறை செயலாளர், காவல்துறை கூடுதல் இயக்குநர், சமூக நீதி மற்றும் மனித உரிமைகள், ஆணையர், ஆதிதிராவிடர் நலம், இயக்குநர், பழங்குடியினர் நலம் மற்றும் பாராளுமன்ற / சட்டமன்ற உறுப்பினர்கள் ஆகியோரை வரவேற்றுப் பேசினார். மேலும், நமது இந்தியாவில் 16.62 சதவீதம் பட்டியலினத்தவர் இருக்கின்றனர் என்றும் அகில இந்திய அளவில் 5வது இடத்தில் நாம் இருப்பதுமிகவும் பெருமைப்படக்கூடிய ஒன்று என்றும் கூறினார். எல்லா மாநிலமும் தமிழகத்தை முன்னோடியாக எடுத்துக்கொண்டு செயல்பட்டுக்கொண்டிருக்கின்றன என்றும், உதாரணமாக, 9 மாநிலங்களில் மட்டுமே ஆதிதிராவிடர்களுக்கென சிறப்பு நீதிமன்றங்கள் செயல்படுகின்றன எனவும், அவற்றில் நமது மாநிலமும் ஒன்று எனும்போது மிகவும் பெருமையாக இருக்கின்றது என்றும் கூறினார்.

குடியியல் உரிமைகள் பாதுகாப்புச் சட்டம் 1955 மற்றும் வன்கொடுமைகள் தடுப்புச் சட்டம் 1989—ஐப் பின்பற்றி ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு எதிராக இழைக்கப்படும் அநீதிகள் (வன்கொடுமை தடுப்பு) தடுக்கப்பட்டு மத இன நல்லிணக்கம் போற்றும் அமைதிப் பூங்காவவாக தமிழகம் திகழ்கிறது என அனைவரும் பாராட்டுவதாகவும் தெரிவித்தார்.

திரு இராதாகிருஷ்ணன், இ.கா.ப., காவல்துறை கூடுதல் தலைமை இயக்குநர், சமூக நீதி மற்றும் மனித உரிமைகள் அவர்கள் தனது விளக்க உரையில், இந்திய அரசியலமைப்புச் சட்டம் பிரிவு 17, தீண்டாமை மிகப் பெரிய குற்றம் அது முற்றிலும் ஒழிக்கப்படவேண்டும் என சுட்டிக் காட்ட உருவாக்கப்பட்டது என்றும் அந்த கொடுமையான குற்றத்தை செய்பவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க இந்திய அரசியலமைப்புச் சட்டம் பிரிவு 35 ஏற்படுத்தப்பட்டது என்றும் கூறினார். 1989—ம் ஆண்டு வன்கொடுமை தடுப்புச் சட்டம் இயற்றப்பட்டு 1990—ஆம் ஆண்டு முதலே நடைமுறைக்கு கொண்டுவரப்பட்டது என்றும், இன்றைய தேதியில் 3275 வன்கொடுமை தடுப்புச் சட்ட வழக்குகள் தமிழகத்தின் வெவ்வேறு நீதி மன்றங்களிலும் மற்றும் சிறப்பு நீதிமன்றங்களிலும் நிலுவையில் உள்ளன என்றும் இன்றைய தேதியில் 628 வன்கொடுமை தடுப்புச் சட்ட வழக்குகள் புலன் விசாரணையில் உள்ளன என்றும் வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின்படி அனைத்து வழக்குகளிலும் காவல் துணை கண்காணிப்பாளர் / காவல் உதவி ஆணையர், விசாரணை அதிகாரிகளாக நியமிக்கப்பட்டு, விசாரணை 30 நாட்களுக்குள் முடிக்கப்பட வேண்டும் என்றும் சாதி சான்றிதழுக்காகவும், சட்ட கருத்துரைக்காகவும், மருத்துவச் சான்றிதழுக்காகவும் மற்றும் இதர காரணங்களுக்காகவும் விசாரணையில் சில வழக்குகள் நிலுவையில் உள்ளன என்றும் கூறினார். வன்கொடுமை தடுப்புச் சட்டம் 1989 (PoA Act,1989)—ன் கீழ் குற்றவாளிகளுக்குக் கடுமையான தண்டனைகளும், பாதிக்கப்பட்டவர்களுக்கு அதிகமான தீருதவிகளும் வழங்கப்படுவதால், குடியியல் உரிமைகள் பாதுகாப்புச் சட்டம் 1955 (PCR Act, 1955)—ன் கீழ் வழக்குகளைப் பதிவு செய்ய யாரும் முன்வருவதில்லை என்றும் கூறினார்.

சமூக நீதி மற்றும் மனித உரிமைகள் துறை கடந்த 3 ஆண்டுகளாக 39,000 கிராமங்களுக்குச் சென்று மக்களுக்கு சமூக நீதி விழிப்புணர்வு முகாம்கள் ரூ.70.00 இலட்சம் செலவில் நடத்தியுள்ளது என்றும் தெரிவித்தார்.

மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் அவர்கள், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மக்களின் சமூக பொருளாதார முன்னேற்றத்திற்காக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பல்வேறு நலத்திட்டங்களை அறிவித்து இருக்கிறார்கள் எனவும், வருடத்திற்கு இரண்டு முறை நடத்தப்படவேண்டிய மாநில அளவிலான உயர்நிலை விழிப்பு மற்றும் கண்காணிப்புக் குழுக் கூட்டத்தினை கடந்த ஐந்தாண்டு ஆட்சிக் காலத்தில், முந்தைய ஆட்சியினர் ஒரே ஒருமுறை மட்டுமே நடத்தியுள்ளார்கள் எனவும் தெரிவித்து நமது ஆட்சிப்பொறுப்பேற்ற ஓராண்டு காலத்திலேயே முதல் கூட்டத்திற்கு வழிவகுத்துக் கொடுத்த புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றியினை தெரிவித்துக்கொண்டார். இனி வரும் காலங்களில், ஆண்டுக்கு இரு முறை இக்கூட்டம் கண்டிப்பாக நடத்தப்பட்டு தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இழைக்கப்படும் வன்கொடுமைகள் கண்டறியப்பட்டு தீர்வு

காணப்படும் என்றும் தெரிவித்தார். 3 மாதத்திற்கு ஒருமுறை மாவட்ட அளவிலான விழிப்பு மற்றும் கண்காணிப்புக் குழுக் கூட்டம் ஒவ்வொரு மாவட்டத்திலும் நடத்தப்படவேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது என்றும், எங்கே எல்லாம் தீண்டாமை கொடுமை நடைபெறுகிறதோ அங்கெல்லாம் உடனடி தீர்வு காணவே ஒவ்வொரு மாவட்டத்திலும் கண்காணிப்புக் குழு கூட்டப்பட்டுள்ளது எனவும் தெரிவித்தார். உத்தப்புரம், சேலம் வ.உ.சி நகர், மீனாட்சி நகர் ஆகிய இடங்களில் தடுப்பு சுவர் அகற்றப்பட்டதை சுட்டிக்காட்டினார். மேலும் ஒவ்வொரு மாவட்டத்திலும் (சென்னை நீங்கலாக), தீண்டாமையைக் கடைப்பிடிக்காமல் பொது மக்கள் நல்லிணக்கத்துடன் வாழும் ஒரு கிராமம் தெரிவு செய்யப்பட்டு அக்கிராமத்திற்கு தற்போது வழங்கப்பட்டு வரும் ரூ.2 இலட்சம் ஊக்கத் தொகை இந்த ஆண்டு முதல் ரூ.10.00 இலட்சமாக உயர்த்தி வழங்க மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள் எனவும், அதன்படி 31 மாவட்டங்களுக்கு (சென்னை நீங்கலாக) ரூ. 310 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது எனவும் இனிவரும் காலங்களில் எங்காவது வன்கொடுமை நடப்பதாக தெரியவந்தால் அது அம்மா அவர்களின் பார்வைக்கு கொண்டு செல்லப்பட்டு உடனடியாக தீர்வு காணப்படும் எனவும் கூறினார். மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் பிரதிநிதியாக மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் இக்கூட்டத்திற்குத் தலைமையுரை ஆற்றினார்கள்.

மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் தமது தலைமையுரையில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் ஆகியோரின் வாழ்க்கை வளம்பெறவும், அவர்கள் பொருளாதாரத்தில் முன்னேற்றம் அடையவும், அவர்களுக்கு எதிராக சமூகத்தில் சிலரால் ஆங்காங்கு நிகழ்த்தப்படும் வன்கொடுமைகள் மற்றும் அநீதிகளை வேரோடு களையவும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் உறுதிபூண்டு பல்வேறு திட்டங்களைத் தீட்டி சிறப்பான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும், உதாரணமாக 1059 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல விடுதிகளைப் புதுப்பித்திட ரூ.76.33 கோடி, 779 ஆதிதிராவிடர் நலப் பள்ளிகளில் கழிவறை வசதிகளை ஏற்படுத்த ரூ.38.95 கோடி, விடுதியில் தங்கிப் பயிலும் ஆதிதிராவிட கல்லூரி மாணவர்களுக்கான மாத உணவுப்படி ரூ.550–லிருந்து ரூ.750 ஆகவும், பள்ளி மாணவர்களுக்கான உணவுப்படி ரூ.450–லிருந்து ரூ.650 ஆகவும் உயர்த்தி கூடுதல் ஒதுக்கீடு ரூ.76.76 கோடி, ரூ.1,70,517 ஆதிதிராவிட பழங்குடியின மாணவ மாணவியருக்கு விலையில்லா மிதி வண்டிகள் வாங்க ரூ.43 கோடி என பல்வேறு திட்டங்களுக்காக ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது எனவும் தெரிவித்தார். தமிழக வரலாற்றில் முதன் முறையாக சுயநிதிக் கல்வி நிறுவனங்களில் 26,000 ஆதிதிராவிட, பழங்குடியின மாணவ, மாணவியருக்கு ரூ.111.45 கோடி கல்விக் கட்டணமாக வழங்க உத்தரவிட்டுள்ளதாகவும் ஆதிதிராவிடர் துணைத் திட்டத்தின் கீழ் ரூ.5007 கோடி மற்றும் பழங்குடியினர் நலனுக்கென ரூ.246 கோடி பழங்குடியினர் துணைத் திட்டத்தின் கீழ் ரூ.246 கோடி ஒதுக்கப்பட்டுள்ளதாகவும், நலிந்த தாட்கோவிற்கு புத்துயிர் ஊட்ட முதல் கட்டமாக ரூ.13.26 கோடி பங்கு மூலதன ஒதுக்கீடு செய்தும், தாட்கோ மூலம் எப்போதும் இல்லாத அளவில் 51, 479 ஆதிதிராவிடர் பயனாளிகளுக்கு ரூ.79.86 கோடி மானியம் மற்றும் ரூ.145 கோடி வங்கிக் கடனாகவும் வழங்கப்பட்டது எனவும், இது போன்று இன்னும் பல மகத்தான திட்டங்கள் மாண்புமிகு அம்மா அவர்களது அரசு ஆட்சிப் பொறுப்பேற்றதிலிருந்து அறிவிக்கப்பட்டு, நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதாகத் தெரிவித்தார்.

2012–ஆம் ஆண்டு தமிழகத்தில் 150 கிராமங்கள் வன்கொடுமைக் கிராமங்களாகத் தெரிவு செய்யப்பட்டு, கிராமங்கள் அனைத்திலும் வன்கொடுமை நடக்காத வண்ணம் உரிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை சம்பந்தப்பட்ட மாவட்ட நிர்வாகத்துடன் இணைந்து காவல்துறை மேற்கொள்ள வேண்டுமென்றும், . வன்கொடுமை குற்றங்களை புலன் விசாரணை செய்து, பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் தேடித் தர வேண்டியதும், குற்றவாளிகளுக்கு தண்டனை பெற்றுத் தருவதும் நமது கடமை எனவும் கூறினார். உறுப்பினர்கள் அனைவரும் மேற்கூறப்பட்டுள்ள ஆக்கபூர்வமான ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் திட்டங்களை மக்களுக்கு எடுத்துச்சொல்வதோடல்லாமல் அவர்களது ஆக்கபூர்வமான ஆலோசனைகளையும் அரசுக்குத் தெரிவிக்குமாறு கேட்டுக் கொண்டார்.

அரக்கோணம் தொகுதி, சட்டமன்ற உறுப்பினர் திரு சு. ரவி அவர்கள், மாவட்ட அளவிலான விழிப்பு மற்றும் கண்காணிப்புக் குழு அமைக்கப்பட்டுள்ளதா எனவும், எந்த கிராமம் தீண்டாமையற்ற கிராமமாக தேர்வு செய்யப்பட்டது எனவும் கோரினார். வேலூர் மாவட்டத்தில் குழு அமைக்கப்பட்டுள்ளது எனவும் தீண்டாமை அற்ற கிராமமாக மேல்காவனூர் வட்டம், காட்பாடி கீழ்க்குப்பம் தேர்வு செய்யப்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டது.

பொன்னேரி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு பொன் ராஜா அவர்கள், ஆதிதிராவிடர் பள்ளிகளில் ஆசிரியர், துப்புரவு பணியாளர்கள் காலியிடங்களை பூர்த்தி செய்யுமாறும் 10 மற்றும் 12ஆம் வகுப்பு தேர்வு எழுதும் மாணவர்களுக்கு ஆதிதிராவிடர் நலப் பள்ளியிலேயே தேர்வு மையம் அமைத்துத் தரும்படியும் கேட்டுக்கொண்டார். செயலர் அவர்கள் தனது பதிலுரையில், தேர்வு மையம் சிறப்பு இனமாக தொடங்க நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவித்தார்.

சேலம் மாவட்டம், ஆத்தூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு சு. மாதேஸ்வரன் அவர்கள், உண்டு, உறைவிடப் பள்ளி விடுதிகளில் ஆதிதிராவிடர்களை விடப் பழங்குடியினர் அதிகமாக உள்ளதாகவும், ஆதிதிராவிடர் மாணவர்கள் விடுதிகளில் தங்குவதற்கு எண்ணிக்கையை அதிகப்படுத்தித் தரும்படியும் கேட்டுக்கொண்டார். மேலும், ஆத்தூர் நகராட்சிக்குட்பட்ட அம்பேத்கார் உண்டு உறைவிடப் பள்ளியில் வேதியியல் மற்றும் இயற்பியல் ஆசிரியர் பற்றாக்குறை உள்ளதாகவும், அப்பணியிடத்தை நிரப்பிடவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார். மேலும் தனது தொகுதியில் கூடுதலாக விடுதி அமைத்துத் தரும்படியும் கேட்டுக்கொண்டார்.

செயலர், தனது பதிலுரையில் உண்டு உறைவிடப் பள்ளிகளில் 60% பழங்குடியினருக்கும் 30% ஆதிதிராவிடர்களுக்கும் 10% பிற்படுத்தப்பட்டோருக்கும் கொடுக்கப்படுவதாக தெரிவித்தார்.

பெரம்பலூர் தொகுதி, சட்டமன்ற உறுப்பினர் திரு இரா. தமிழ்ச்செல்வன் அவர்கள் பேசுகையில் அம்மா ஆட்சிக்கு வந்தபின், 30 விழுக்காடு ஆதிதிராவிட பட்டியல் இனத்தவர்களுக்காக கறவை மாடுகள் வழங்குமாறு ஆணையிட்டுள்ளார்கள். மேலும் அருந்ததியர் இன மக்கள் நில எடுப்பு வழக்குகள் தங்கள் தொகுதியில் நிலுவையில் உள்ளதாகவும், அந்த மக்களுக்கு உதவி செய்திடுமாறும் கேட்டுக்கொண்டார். மேலும் பெரம்பலூர் மாவட்டம் மிகவும் பின்தங்கிய மாவட்டமாகவே உள்ளது எனவும்,

பெரம்பலூர் வேப்பந்தட்டை வட்டாரத்தில் ஆதிதிராவிடர் மக்கள் அதிகமாக உள்ளதால் அம்மக்கள் முன்னேற வேண்டும் என்பதற்காக ரூ.19 கோடி நிதி ஒதுக்கீடு வழங்கி இருப்பதாகவும், மேலும் அடிப்படை வசதிகளை செய்து தரும்படியும் கேட்டுக்கொண்டார். செயலர் அவர்கள் தனது பதிலுரையில், நில எடுப்பு முடிந்த இனங்களில் இன்னமும் பட்டாக்கள் வழங்கப்படவில்லை என்பதால் மாவட்ட ஆட்சித் தலைவரின் கவனத்திற்கு கொண்டு சென்று தங்கள் முன்னிலையிலேயே வீட்டுமனைப் பட்டா வழங்குவதற்கு ஏற்பாடு செய்யுங்கள் என்று கூறினார். நிலத்திற்கு அரசு நிர்ணயம் செய்துள்ள விலை மதிப்பு குறைவாக இருப்பதால் ஆதிதிராவிட மக்களுக்கு நிலம் கொடுப்பதற்கு யாரும் முன்வருதில்லை எனத் தெரிவித்தார்.

பாராளுமன்ற உறுப்பினர், விழுப்புரம் தொகுதி திரு ஆனந்தன் அவர்கள் தமிழகத்தை அமைதிப் பூங்காவாக நமது மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற ஓராண்டு காலத்திலேயே மாற்றிவிட்டார்கள் எனவும் ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின மக்கள் பொருளாதாரம் மற்றும் கல்வியில் உயர்ந்தால் தான் முன்னேற முடியும் என்ற உன்னத நோக்கத்தில் அரசு நடவடிக்கை எடுத்து வருவதாகவும் கூறினார், மேலும் கல்விக்காக அதிக நிதி ஒதுக்கீடு செய்துள்ளதாகவும் தெரிவித்தார். தீண்டாமையை ஒழிப்பதற்கு உள்துறைச் செயலாளர் அவர்களுக்கும், காவல்துறை கூடுதல் தலைமை இயக்குநர், சமூக நீதி மற்றும் மனித உரிமைகள் அவர்களுக்கும் கூடுதல் பொறுப்பு உள்ளதாக தெரிவித்தார். விழுப்புரம் தொகுதியில் தொகுப்பு வீடுகள், விடுதிகள் போதுமான அளவில் அமைக்கப்பட்டுள்ளதாகவும், அரசாங்கம் அப்பகுதியில் மயான வசதி செய்து தர உதவி செய்திடுமாறு கேட்டுக்கொண்டார். ஊட்டியில் உள்ள படுகர் என்ற சமுதாயத்தினரை பழங்குடியினர் பட்டியலில் சேர்க்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார்.

திருவள்ளூர் தொகுதி, பாராளுமன்ற உறுப்பினர் திரு வேணுகோபால் அவர்கள், தாழ்த்தப்பட்ட மக்கள் மீது நடைபெறுகின்ற வன்கொடுமைகளைப் பற்றி 193 பிரிவின்படி பாராளுமன்றத்தில் விவாதம் வந்ததாகவும், அதில் தனது கருத்துக்களை பதிவு செய்துள்ளதாகவும் கூறினார். வன்கொடுமைகளை தடுப்பதற்காக அம்மா அவர்கள் மாவட்ட அளவிலான கண்காணிப்புக் குழு அமைத்து இருப்பதாகவும், சிறப்பு நீதிமன்றங்கள், சிறப்பு வழக்குரைஞர்கள் பற்றியும் பேசி அம்மா அவர்களின் நல்லாட்சி குறித்து மகிழ்ச்சியடைவதாக தெரிவித்தார்.

மேலும், வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்படும் வழக்குகளில், முதல் தகவலறிக்கை சரியாகப் பதியப்படவில்லை என்ற காரணத்தினால், தள்ளுபடி செய்யப்படுகின்றன என்றும் முதல் நிலை காவலர் மற்றும் காவல்துறை துணை கண்காணிப்பாளர் (DSP) ஆகியோருக்குச் சிறப்புப் பயிற்சி அளிக்க வேண்டும் எனவும் வன்கொடுமைத் தடுப்பு நிகழ்கின்ற இடங்களில் கல்வி, பொருளாதார வளர்ச்சி திட்டங்களை ஏற்படுத்தித் தர வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

காவல்துறை கூடுதல் தலைமை இயக்குநர் வழக்குகளை உதவி ஆய்வாளர் விசாரணை செய்ய முடியாது என்றும் காவல்துறை துணை கண்காணிப்பாளர் அளவில் தான் விசாரணை செய்ய முடியும் எனவும் வழக்கின் போது சாட்சிகள் பிறழ் சாட்சிகளாக மாறுவதுதான் வழக்குகள் தள்ளுபடியாவதற்குடக காரணம் என்றும் தெரிவித்தார்.

வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்படும் வழக்குகளை மாவட்ட அளவிலான விழிப்பு மற்றும் கண்காணிப்புக் குழு பரிசீலணை செய்யலாம் எனவும் காவல் துறை மூலம் துணைக் கண்காணிப்பாளருக்குப் பயிற்சியளிக்கப்படுகிறது எனவும் தெரிவித்தார்.

சோழவந்தான் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் மா. கருப்பையா அவர்கள் பேசுகையில் மதுரை மாவட்டத்தில் வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட 28 வழக்குகளில் 23 வழக்குகள் தள்ளுபடிசெய்யப்பட்டுவிட்டன என்றும் 5 வழக்குகள் மட்டும் நிலுவையில் உள்ளன என்றும் தெரிவித்தார். ஒரு தாழ்த்தப்பட்ட மனிதன் உயர் சாதி மக்கள் இருக்கும் பகுதியில் செருப்பு அணிந்து செல்லும்போது தடுத்தல், சாதியைச் சொல்லிப் பேசுதல், ஆலயப் பிரவேசம் செய்யும் போது தடுத்தல் போன்றவற்றின் போதுதான் வன்கொடுமைச் சட்டம் பயன்படுத்தப்பட வேண்டும் என்றும் சில பொய்யான வழக்குகளை வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தின் கீழ் பதிவு செய்தல் தவறானது . அது களையப்பட வேண்டும் என்றும் கூறினார்.

பூந்தமல்லி தொகுதி, சட்டமன்ற உறுப்பினர் திரு. மணிமாறன் அவர்கள் வன்கொடுமைத் தடுப்புச் சட்டம் பற்றியும் செவ்வாப்பேட்டை ஆதிதிராவிடர் நல மேல்நிலைப் பள்ளிக்கு 14 ஏக்கர் நிலம் உள்ளது அதனை ஆதிதிராவிடர் கல்லூரியாக தரம் உயர்த்தித் தர வேண்டும் என்றும் கூறினார்.

திரு.பொ. சிவசங்கரன், ஆணையர், ஆதிதிராவிடர் நலம் அவர்கள் இறுதியாக நன்றியுரை ஆற்றினார்.

ஆ.சு. ஜீவரத்தினம்
அரசு செயலாளர்.

// உண்மை நகல்//

ஆ.ரேணுகா
12.07.2012
பிரிவு அலுவலர்